## NTPN Martha-CARE (என்.டி.பி.என் மார்த்தா கேர்) குழுவைச் சந்திக்கவும்

### ஆலோசகர்கள்


க்ரைக் க்நாட்


ஜென்னி பல்லவெலா


பீட்ரைஸ் ஆல்நட்


சேவியர் காவெலா

### குடும்பத்தினருக்கு ஆதரவளிக்கும் செவிலியர்கள்


கைலி லியோன்ஸ்


ஆனி டவ்சன்


ஆனி புரூஸ்

North Thames Paediatric Network
Connecting paediatric services

Tamil

# மார்த்தா-கேர்

**தகவல்தொடர்பு உதவி மற்றும் விரைவாக முன்னெடுத்துச் செல்தல்**

## குடும்பத்தினர் மற்றும் பராமரிப்பாளர்கள் குறித்த தகவல்கள்

நார்த் தேம்ஸ் பீடியாட்ரிக் நெட்வொர்க் பைலட் திட்டம்

martha's rule
detecting deterioration

Children's Acute Transport Service
NHS

# நார்த் தேம்ஸ் பீடியாட்ரிக் நெட்வொர்க் என்பவர்கள் யார்?

நாங்கள் லண்டன் நகரம், தேம்ஸ் நதியின் வட பகுதி எல்லைக்குட்பட்ட குழந்தைகள் சேவை வழங்கும் அனைத்து மருத்துவமனைகள் மற்றும் லண்டன் நகரின் கிழக்கே பகுதிக்கு வெளியே அமைந்துள்ள சில மருத்துவமனைகளுக்கு சேவை வழங்கும் ஒரு குழு. இந்த மருத்துவமனைகள் பாதுகாப்பான மற்றும் உயர்தர பராமரிப்பு வசதியை ஒரே சீராக அணுகும் வாய்ப்பை அனைத்து குழந்தைகளுக்கும் வழங்கி பராமரிக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

## மார்த்தா-கேர்என்றால் என்ன?

மருத்துவமனையில் இருக்கும் உங்கள் குழந்தை குறித்து நீங்கள் கவலைப்படும் சந்தர்ப்பங்களில், உதவி பெற அணுகுவதற்கு மார்த்தா-கேர் ஒரு மாற்று வழியாகும். இது நார்த் தேம்ஸ் பீடியாட்ரிக் நெட்வொர்க் (NTPN) வழங்கும் ஒரு சேவையாகும் மற்றும் இது **மார்த்தாவின் வழிகாட்டு நெறி** என்று அழைக்கப்படும் NHSஆல் ஆதரவளிக்கப்பட்டு வரும் மிகப் பெரிய திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

## மார்த்தாவின் வழிகாட்டு நெறி என்பது என்ன?

மார்த்தாவின் வழிகாட்டு நெறி பற்றி நீங்கள் செய்திகள் மூலம் கேள்விப்பட்டிருக்கலாம் அல்லது மருத்துவமனை விளம்பரப் பலகைகளில் பார்த்திருக்கலாம். மேலும் சில சந்தர்ப்பங்களில் ‘*கவலை குறித்த அழைப்பு* என்றும் இது அழைக்கப்படுகிறது. மருத்துவமனையில் மிகவும் உடல் நலிவடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்ட மார்த்தா என்ற ஒரு சிறுமியின் உடல் ஆரோக்கியம் குறித்த அவரது குடும்பத்தினரின் கவலைகள் கவனிக்கப்படாத ஒரு சம்பவத்தை தொடர்ந்து இது உருவானது. குழந்தையின் ஆரோக்கியம் குறித்து கவலைப்படும் அனைத்து குடும்பத்தினர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கும் உதவி வழங்கப்படுவதையும், அவர்களின் குறைகள் கேட்கப்படுவதையும் உறுதி செய்ய மார்த்தாவின் பெற்றோர் விரும்பினர்.

## மார்த்தா கேர் எவ்வாறு வேலை செய்கிறது?

மார்த்தாவின் வழிகாட்டு நெறி அல்லது 'கவலை குறித்த அழைப்பு' ஆகியவற்றை பயன்படுத்திய பிறகும் நீங்கள் கவலையாக உணர்ந்தால், மருத்துவமனையில் உதவி பெறுவதற்கான மற்றொரு மாற்று வழி மார்த்தா கேர். நீங்கள் தற்போது இருக்கும் மருத்துவமனைக்கு வெளியே உள்ள வேறு குழுவை அழைப்பதற்கான ஒரு தொலைபேசி எண் இது. இது சில்ரன்ஸ் அக்யூட் டிரான்ஸ்போர்ட் சர்வீஸ் (Children's Acute Transport Service) (CATS) என்று அழைக்கப்படுகிறது. CATS என்பது மிகவும் நோய்வாய்ப்பட்டு மிகவும் உடல் நலிவுற்ற குழந்தைகளைக் கொண்ட மருத்துவமனைகளைகளுக்கு ஆதரவளித்து உதவும் ஒரு சிறப்பு சேவையாகும். மார்த்தா கேரைத் தொடர்புகொள்ள உங்கள் மருத்துவர் அல்லது செவிலியரை அணுகவும். இந்த அழைப்பு எண் 24/7 மணி நேரமும் செயலில் இருக்கும்.

## இந்த அழைப்பின்போது என்ன நடக்கும்?

உங்கள் உள்ளூர் குழுவினர் உங்கள் குழந்தை பற்றியும் மருத்துவமனையில் நடப்பது பற்றியும் CATS ஆலோசகருக்கு தகவல் தெரிவித்தபிறகு, நீங்கள் அவர்களுடன் பேச முடியும். உங்கள் கவலைகள் மற்றும் மார்த்தா கேர் அழைப்பை நீங்கள் மேற்கொள்ள வேண்டிய தேவை உங்களுக்கு ஏன் ஏற்பட்டது என்பது குறித்து உங்களிடம் கேட்கப்படும். வழக்கமான வேலை நேர அழைப்புகளின்போது உங்களுக்கு உதவ ஒரு குடும்ப ஆதரவு செவிலியரும் இருப்பார். உங்கள் குழந்தையின் பராமரிப்பில் ஒரு சிறப்பு மருத்துவர் குழு ஈடுபட்டிருந்தால், இந்த அழைப்பில் அவர்களும் தொடர்புகொள்ளப்படலாம். உங்கள் கவலைகளுக்கு தீர்வு கண்டு உதவ உங்களுடனும், உங்கள் குழந்தையின் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுடனும் இணைந்து பணியாற்ற நாங்கள் முயற்சிப்போம்



## அடுத்து என்ன நடக்கும்?

நீங்கள் மார்த்தா-கேர் சேவையைப் பயன்படுத்திய சுமார் 4-6 வாரங்களுக்குப் பிறகு, நீங்களும் உங்கள் குழந்தையும் எப்படி இருக்கிறீர்கள் என்பதையும், எங்கள் சேவையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதையும் அறிந்துகொள்ள மார்த்தா-கேர் குடும்ப ஆதரவு செவிலியர்கள் உங்களைத் தொடர்புகொள்வார்கள். நாங்கள் சிறந்த பராமரிப்பை வழங்குவதை உறுதிப்படுத்த விரும்புகிறோம், ஆகவே உண்மையிலேயே எங்களைக் குறித்த உங்கள் எண்ணங்களை அறிய விரும்புகிறோம்.



## மேலதிக தகவல்களை நான் எங்கே தெரிந்துகொள்ளலாம்?

மேலும் தகவல் தேவைப்பட்டால், உங்கள் செவிலியர் அல்லது மருத்துவரிடம் ஆலோசிக்கவும். அல்லது பின்வரும் இணையதளங்களில் எண்ணற்ற தகவல்கள் உள்ளன

NHS England - https://www.england.nhs.uk/patient-safety/marthas-rule/ NTPN - Martha’s Rule https://ntpn.co.uk/marthas-rule-2/